27th April 1959]

Import of finer yarn

* 155 Q.—SRI D. S. AUTHIMOOLAM (on behalf of SRI K. SATTANATHA KARAYALAR): Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether the State Apex Society of handloom weavers or other co-operative organisations have imported finer yarn during 1957–58 and 1958–59;

(b) if so, what are the counts and what is the quantity so imported; and

(c) the manner in which they are distributed to the weavers?

THE HON. SRI R. VENKATARAMAN: (a) & (b) The Madras State Handloom Weavers' Co-operative Society (i.e., the State Apex Society) imported twenty-five thousand pounds (25,000 lb.) of 1/100 super combed yarn during 1957–58. It did not import any finer yarn during 1958–59 (i.e., from 1st April 1958 to 28th February 1959). No other weavers co-operative societies in this State imported any finer yarn during 1957–58 and 1958–59.

(c) The finer yarn imported by the State Society was distributed among its units at Kumbakonam, Tiruchirappalli, Salem, Erode, Madurai and Coimbatore for supply to the members of the primary weavers societies who used 100s yarn.

SRI K. VINAYAKAM: When it is our objective to encourage indigenous industry, will not the import of finer qualities of yarn affect the handloom industry?

THE HON. SRI R. VENKATARAMAN: On the other hand the handlooms will be enabled to weave finer cloth by using the combed yarn.

Untouchability.

* 156 Q.—SRI P. G. MANICKAM: கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) அனுபந்த ஜாதியார்கள், அனுபந்த மலே ஜாதியார்கள், இவர்கள் சம்பந்தப்பட்ட கமிஷனர் அவர்கள் அறிக்கையின்பேரில் தயாரித்த தீண்டாமை இன்னும் நிலவி வரும் கிராமங்களின் பட்டியல் பிரகாரம் எந்தெந்த கிராமங்களிலே தீண்டாமை நிலவி வருகிறது ?

(ஆ) அந்த கிராமங்களிலே தீண்டாமையானது எந்த ரூபத்திலே நிலவி வருகிறது

THE HON. SRI P. KAKKAN: (a) & (b) The Director of Harijan Welfare has consulted the Collectors regarding the list of villages where untouchability exists at present. A few Collectors have given a list of villages. One Collector has stated that it is not possible to list out the villages where untouchability is still prevalent. A few other Collectors have stated that there is no village where untouchability is prevalent in their districts.

Though untouchability is an offence under the Untouchability (Offences) Act of 1955, it cannot be said that our villages are entirely free from this practice in some form or other. It is however not possible to draw with any degree of accuracy, a list of villages where practice of untouchability is still prevalent.

Sri P. G. MANICKAM: கிராமங்களில் பொதுவாக காப்பிக் கடைகளில் தீண்டாமைக் கொடூரம் மிகவும் தாண்டவமாடும் முறையில் இருக்கிறது. அங்கு ஹரிஜனங்களுக்கு காப்பி கொடுப்பதற்காக தனியாக டம்ளர்கள், பாத்திரங்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. சாப்பாடுகூட தனிமையாக வைத்து போடப்படுகிறது. ஆகவே இப்படிப்பட்ட தீண்டாமைக் கொடுமையை நிவர்த்திப்பதற்கு சர்க்கார் ஏதாவது நடவடிக்கைகள் எடுப்பார்களா ?

The Hon. Sri P. KAKKAN: காப்பிக் கிளப்பிலும் எந்த வித மான வித்தியாசமும் பார்க்கக்கூடாது என்பதுதான் சட்டத்தின் தன்மை. போலீஸ் அதிகாரிகளும் இந்த விஷயத்தில் அக்கரை காட்டி உடனடியாக நடவடிக்கைகள் எடுக்கவேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். மதிப்பிற் குறிய அங்கத்தினர் அவர்கள் ஏதாவது குறிப்பிட்ட கிராமங்களில் அல்லது நகரங்களில் அப்பேர்பட்ட தன்மையில் நடக்கிறது என்று என்னிடம் தெரிவித்தால் இதற்கு வேண்டிய நடவடிக்கைகள் உடனே எடுக்கப்படும்.

Sri J. MATHA GOWDER: காப்பிக் கடைகளில் ஹரிஜனங்களானாலும் சரி அல்லது வேறு எந்த ஜாதியினரானாலும் சரி, அவர்கள் அசிங்கமாக காப்பிக் கடைகளில் நுழையும்போது காப்பிக் கடை முதலாளிகள் அப் பேர்ப்பட்டவர்கள் வருவதை தடுப்பது நியாயம் தானே ? அதைப்பற்றி சர்க்கார் என்ன யோசிக்கிறது ?

The Hon. Sri P. KAKKAN: அப்படி அசிங்கமாக வருகிறவர்களைத் தடுக்கலாம் என்று சொன்னால் வேண்டுமென்றே ஹரிஜனங்களை, அசிங்கமாக வருகிறார்கள் என்று சொல்லி வெளியேற்றி விடுவார்கள். அப்படி அதை வைத்துக்கொண்டு வரக்கூடாது என்று சொல்வது அநீதி.

Sri K. RAMACHANDRAN: ஒரு சில ஜில்லாக்களில் இந்த முறை யில்லை என்று கலெக்டர்கள் ரிப்போர்ட் செய்திருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். எந்தெந்த ஜில்லாக்களில் அப்படி இருக்கிறது என்று சொல்ல முடியுமா ?

The Hon. Sri P. KAKKAN: குறிப்பிட்டு சொல்லமுடியாது. கலெக் டர்கள் லிஸ்ட் அனுப்பியிருக்கிறார்கள். கோயம்புத்தூர் ஜில்லா கலெக்டர் மட்டும் உடுமலைப்பேட்டையில் மட்டும்தான் 18 கிராமங்களில் தீண்டாமையை அதிகமாக கையாள்வதாகச் சொல்கிறார்கள். மற்ற கலெக்டர்கள் அனுப்பிய லிஸ்ட் இப்பொழுது என்னிடம் இல்லை.

Sri P. G. MANICKAM: அமைச்சர் அவர்கள் இதில் சொன்னபோது குறிப்பிட்ட இடங்களைத் தெரிவிக்கும்படி தெரிவித்தார்கள். நான் தெரி விப்பது, பொதுவாகவே எல்லா கிராமங்களிலும் உள்ள காப்பிக் கடை களில், குறிப்பாக குக்கிராமங்களில் உள்ள கடைகளைப் பற்றிச் சொல்கிறேன், அங்கு இந்த தீண்டாமை கோரமான முறையில் தாண்டவமாடுகிறது. அங்கு ஹரிஜனங்களுக்கு, காப்பி தனி டம்ளர்களில் கொடுக்கப்படுகிறது. சாப்பாடும் தனியாகக் கொடுக்கப்படுகிறது. ஆகவே, எல்லாக் கிராமங் களிலும் இது இருப்பதால் அதை நிவர்த்திக்க, எல்லோருக்கும் சமமாக ஒரே பாத்திரத்தில் காப்பி போன்றவைகள் தரப்பட வேண்டும், தனிமையாக

27th April 1959]

இளாஸ்கள் வைக்கக்கூடாதென்று ஒரு சட்டம் போட்டு அதை அங்குள்ள பஞ்சாயத்து போர்டு மூலம் கவனிக்கும்படிச் செய்வதற்கு வேண்டிய நடவடிக்கைகளை சர்க்கார் எடுப்பார்களா ?

THE HON. SRI P. KAKKAN : கனம் அங்கத்தினர்கள் அவர்கள் சொல்வது மாதிரி, ஒரு சில குக்கிராமங்களில் அப்படி யிருக்கிறது என்பதை நானும் ஒத்துக்கொள்கிறேன். அப்படி இல்லை என்று நான் சொல்ல வில்லை. இருந்தாலும் குக்கிராமங்களிலும் சரி, எந்த இடமாயிருந்தாலும் சரி, ஹரிஜன மக்களும் மற்ற மக்களோடு சமத்துவமாக நடத்தப்பட வேண்டு மென்பதற்காக போலீஸ் அதிகாரிகளிடமும் ஏற்பாடு செய்து அதற்காக மூன்று மாதங்களுக்கு ஒரு தடவை கூடுகிற ஹரிஜன நல கமிட்டியில் சம் பந்தப்பட்ட அதிகாரிகள் வருகிறார்கள். அப்பொழுது, இங்கு சொல்லப்படுகிற விஷயங்களைக் கவனிக்கிறார்கள். ஆகவே, யாரை நம்பி சட்டத்தையும், நீதியையும், ஒழுங்கையும் நடத்த வேண்டுமென்று ஒப்படைத்திருக்கிறார் களோ அவர்கள் தக்க முறையில் அதைப் பார்த்துக்கொள்வார்கள்.

Financial Assistance to South Arcot District Board

MR. SPEAKER : கனம் அங்கத்தினர் ஸ்ரீ எ. கோவிந்தசாமி அவர் கள் இடத்தில் இல்லாததால், கேள்வியும் பதிலும் சட்டசபை விவாத வெளி யீட்டில் பிரசுரிக்கப்படும்.

*157 Q.—SRI A. GOVINDASAMY : ஸ்தலஸ்தாபன அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) தென்னாற்காடு ஜில்லா போர்டு நிதி நிலையை உயர்த்திக் கொடுக் கும்படி மாவட்ட சட்டசபை உறுப்பினர் 14 பேர்கள் கையொப்பம் இட்டு கொடுத்திருக்கிறார்களா ?

(ஆ) அதன்பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது ?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : (a) Yes, Sir.

(b) An additional grant of Rs. 2,66,300 for road and bridge works included in the Second Five-Year Plan and a grant of Rs. 61,900 for payment of contribution towards cost of works taken up under special programmes have been sanctioned.

Tamil Typewriters

*158 Q.—SRI K. SATTANATHA KARAYALAR (on behalf of SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether it is a fact that the Government have approved a new keyboard for Tamil typewriters;

(b) if so, the reasons for the change;

(c) whether the new typewriters are available in the market; and

(d) if so, who are the manufacturers?

THE HON. SRI C. SUBRAMANIAM : (a) Yes, Sir.